தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௦ சௌமிய, ஆடி	மலர்
௪௩	1969–ஜூலை–ஆகஸ்டு	௪

(சென்ற இதழின் தொடர்ச்சி)

செயப்பாட்டு வினை

திரு. S. அகத்தியலிங்கம், எம். ஏ. பிஎச். டி. (கோனா), பிஎச். டி. (இந்தியானா)

மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அடிப்படையிலேயே இவர்கள் கருத்து தவறுகும். இவை இரண்டுமே செய்வினைகள் என்பதுதான் நம் கருத்து. இவ்விரு தொடர்களுமே

106. பையன் பாடத்தைப் படித்தான்

என்ற வாக்கியத்திலிருந்து உருவானவை. பையன் என்பதை முக்கியப் பெயர்ச் சொல்லாகக் கொண்டு ஒரு பெயர்த் தொடரை [noun-phrase] உருவாக்கும் போது

பாடம் படித்த பையன் (105)

என்பதும் 'பாடம்' என்ற சொல்லை (ஐ வேற்றுமையாக வந்தது) முக்கிய பெயர்ச் சொல்லாகக்கொண்டு பெயர்த்தொடரை உருவாக்கும் போது

பையன் படித்த பாடம் (92)

என்பதும் உருவாகின்றன. பெயர்த் தொடர்களாக மாறின போதிலும் பெயர்களுக்கும் வினைக்கும் இடையே வாக்கியத்தில் என்ன தொடர்பு இருந்ததோ அதே தொடர்பு பெயர்த் தொடரிலும் இருக்கக் காண்கிறோம். அதாவது வாக்கியத்தில் "பையன்" எழுவாயாக இருப்பது போலவே "பாடம் படித்த பையன்" என்ற தொடரிலும் "பையன்" எழுவாயாக உள்

ளது. இது போலவே வாக்கியத்தில் "பாடம்", "ஐ" வேற்று மையாக இருப்பது போன்று "பையன் படித்த பாடம்" என்பதிலும் ("படித்த" என்பதின்) ஐ வேற்றுமையாகவே உள்ளது. இந்நிலையில் எவ்வாறு ஒன்று செய்வினையாகவும் மற்றொன்று செயப்பாட்டு வினையாகவும் இருத்தல் முடியும்? "பையன் படித்த பாடம்" என்ற தொடரில் "பையன்" என்பது "படித்த" என்பதின் எழுவாயாகவே இருக்கிறது. இவ்வெழுவாயும் எழுவாய் வேற்றுமை உருவத்தில் இல்லை. இந்நிலையில் இதனை எவ்வாறு செயப்பாட்டுவினை என ஒத்துக்கொள்ள முடியும்?

107. பையன் பள்ளிக்கூடத்தில் படித்தான். 108. பையன் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்தான். 109 பையன் பணத்துக்கு விற்ருன். 110. பையன் கத்தியால் வெட்டினன்.

போன்ற வாக்கியங்களிலிருந்து உருவாகும்.

111. பையன் படித்த பள்ளிக்கூடம் 112. பையன் தண்ணீர் எடுத்த கிணறு 113. பையன் வெட்டிய கத்தி 114. பையன் விற்ற பணம்

போன்ற தொடர்களில் காணப்படும் "பள்ளிக்கூடம்". "கிணறு", "கத்தி", "பணம்" போன்ற பெயர்கள் முறையே "படித்த", "எடுத்த", "வெட்டிய", "விற்ற" என்ற வினைகளின் எழுவாயாக இல்லை. இந்நிலையில் இவைகளும் (எழுவாயாக இல்லாததால்) செயப்பாட்டு வினைகளாகக் கருதப்பட வேண்டும்.

ஆனல் யாரும் இவற்றை

The school read by the boy. The well taken [water] by the boy. The knife cut by the boy. The money sold by the boy.

என மொழி பெயர்ப்பதோ இவற்றைச் செயப்பாட்டுவினை என கருதுவதோ இல்லை.

மூன்ருவதாக சொற்களின் பொருளைப் பொருத்தும் செயப்பாட்டுவினைப் பொருள் படுகிறதா என ஆராய்வோம்.

படித்த பையன் (88) சொன்ன பையன் (89)

115. *அடைத்த பையன்* — போன்றவற்றுள் செய்வினைப் பொருளும்.

படித்த பாடம் (76) *சொன்ன செய்தி* (78)
அடைத்த கதவு (83)

என்பவற்றுள் செயப்பாட்டுவினைப் பொருளும் வருவதற்குக் காரணம் "பையன்", "பாடம்", "செய்தி", "கதவு" போன்ற பெயர்கள் வருவதே என எண்ணுகின்றனர். பாடம், செய்தி, கதவு போன்றவை படித்தல் தொழிலைச் செய்தல் முடியாது. ஆதலால் இவற்றைச் செயப்பாட்டுவினைப் பொருளாக எடுத்தால்தான் சரியாக இருக்கும் என்பது எண்ணம். உண்மையில் பெயரெச்சங்களுக்குப் பின்னர் வருகின்ற பெயர்கள் இந் நிலைகளை நிர்ணயிப்பதில்லை. பெயரெச்சங்களுக்கும் பெயர்களுக்குமிடையே உள்ள இலக்கண உறவுதான் இலக்கணப் பண்பை உணர்த்துகின்றன.

116. பையன் பார்த்தான் → பார்த்த பையன் (எழுவாய்)

117. பையனைப் பார்த்தேன் → பார்த்த பையன் (ஐ வேற்றுமை)

118. பாடத்தைப் படித்தான் → படித்த பாடம் (ஐ வேற்றுமை)

119. பள்ளியில் படித்தான் → படித்த பள்ளி (கண் வேற்றுமை)

120. வீட்டுக்கு வந்தான் → வந்த வீடு (கு வேற்றுமை)

121. பையனிடம் பார்த்தேன் → பார்த்த பையன் (கண் வேற்றுமை)

122. பையனுக்குக் கொடுத்தேன் → கொடுத்த பையன் (கு வேற்றுமை)

போன்ற எடுத்துக்காட்டுகள் இத்தன்மையைக் காட்டும்.

பார்த்த பையன்

என்பது பல பொருளில் வரக்காண்கிறோம். இதனை ஆந்திரனேவும் கூறியுள்ளமை இவண் கருதற்பாலது[1] "பையன் பார்த்தான்" என்ற வாக்கியத்திலிருந்து உருவாகும் போது எழுவாய்-வினை தொடர்பும் "பையனைப் பார்த்தேன்" என்பதிலிருந்து உருவாகும்போது ஐ வேற்றுமை–வினை தொடர்பும்

---

1. Andronov, 1959, p. 249.

'பையனிடம் பார்த்தேன்'' என்பதிலிருந்து வரும்போது, "கண்'' வேற்றுமை–வினை தொடர்பும் "பையனுக்குக் கொடுத்தேன்'' என்பதிலிருந்து உருவாகும்போது "கு'' வேற்றுமை வினை தொடர்பும் இருக்கக் காண்கிறோம். இதுபோன்றே பாடம், பள்ளி, வீடு போன்றவை அஃறிணை சொற்களானாலும் பல்வேறு தொடர்புகளைக் காட்டுகின்றன. எனவே எந்த வாக்கியங்களில் (என்ன தொடர்புகளில்) நின்று உருவாகின்றன என்பது முக்கியமே தவிர தனிப்பட்ட சொற்கள் முக்கியமல்ல. "படித்த பாடம்'' செயப்பாட்டு வினையன்று என்பது முன்னமே விளக்கப்பட்டிருத்தல் காண்க.

இந்நிலையில் செயப்பாட்டுவினை என்றால் என்ன என்பது பற்றி ஆராய்தல் அவசியமாகும். செய்வினை, செயப்பாட்டு வினை என இரு வினைகள் இலக்கண நூல்களில் பேசப்படுகின்றன எனக் கண்டோம். செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன என்பதைக் குறிக்கும் இலக்கண ஆசிரியர்கள் "செய்வினையில் செயப்படு பொருளாக [Object] வருவது செயப்பாட்டு வினையில் எழுவாயாகவும் செய்வினையில் எழுவாயாக வருவது செயப்பாட்டு வினையில் மூன்றும் வேற்றுமை உருபேற்ற பெயராகவும் மாறி வரும்'' எனக் கூறுவர்.[1] ஆங்கிலத்தில்

123. The boy brought the car — என்ற வாக்கியம் செய்வினையாகவும்.

---

1. ஜெஸ்பர்சன் தம்முடைய நூலில் [The Philosophy of Grammar] இது பற்றித் தெளிவாகக் கூறுகிறார். "Here what was the object [or one of the objects] in the active sentence is made into the subject, and what was the subject in the active sentence is expressed either by means of a prepositional group, in English with *by* [formerly *of*] in French with *par* or *de* in Latin with *ab*, etc. or in some languages simply by means of some case form [instrumental, ablative] எனக் கூறுவதுடன் இதைக் கீழ்வருமாறு விளக்குவதையும் காணலாம்.

S	Va	O		S	VP		O
Jack	loves	Jill	=	Jill	is	loved by	Jack

Jack : Sa = Op
Jill : Ja = Sp

Jespersen, 1955, p. 165.

124. The car was brought by the boy — என்ற வாக்கியம் செயப்பாட்டு வினையாகவும் கருதப்படுகின்றன. இவண் செய்வினையில் செயப்படு பொருளாக வந்த "the car" என்பது செயப்பாட்டு வினையில் எழுவாயாகவும் முன்னதில் "the boy" என எழுவாயாக வந்தது பின்னதில் "by the boy" எனவும் வந்திருத்தல் காண்க. இதனை வைத்து நோக்கின்

பையன் பாடம் படித்தான் (106) — என்பது செய்வினை.

126 பையனால் பாடம் படிக்கப்பட்டது — என்பது செயப்பாட்டு வினை.

பையன் படித்த பாடம் (92) — என்பது செய்வினை.

பையனால் படிக்கப்பட்ட பாடம் (103) — என்பது செயப்பாட்டு வினை.

படித்த பாடம் (76) — என்பது செய்வினை.

127. படிக்கப்பட்ட பாடம்—என்பது செயப்பாட்டுவினை.

செய்வினையே செயப்பாட்டு வினையாகப் பயன்படுகிறது என்பதைக்காட்டும் மற்றொரு இலக்கணக்கூறாக ஆசிரியர்களால் எடுத்துக் காட்டப்படுவது வினையாலணையும் பெயராகும்.[1]

128. சொன்னது 129. என்பது 130. என்பவர் 131. எழுதினது 132. படித்தது — போன்றவற்றைக் காட்டி, அவை முறையே

133. சொல்லப்பட்டது 134. எனப்படுவது 135. எனப்படுபவர் 136. எழுதப்பட்டது 137. படிக்கப்பட்டது — என

1. "Like all other verbal forms in Tamil participial nouns have no voice differentiation. Therefore, participial nouns, derived from transitive verbs, can be passive as well as active in their meaning".

   Andronov, 1959, pp. 23–24.

   Caldwell, 1961, p. 465.

   டாக்டர் மு. வரதராசன், 1958, ப. 236.

   S. Ilakkuvanar, 1946, pp. 133-134.

   தேவநேயப் பாவாணர், 1945, ப. 117.

பொருள் தருகின்றன எனக்கூறி, அதனால் செய்வினைச் சொற்கள் செயப்பாட்டு வினையாகப் பயன்படுகின்றன என எண்ணுகின்றனர். திராவிட மொழிகளில் வினையாலணையும் பெயர்கள் அனைத்தும் பெயரெச்சத்தை யொட்டி வரும் பெயர்களிலிருந்து உருவாகுவனவாகும்.

138.	வந்த	அவன்	→	வந்தவன்
139.	சொன்ன	அது	→	சொன்னது
140.	என்னும்	அது	→	என்பது
141.	என்னும்	அவர்	→	என்பவர்
142.	எழுதின	அது	→	எழுதினது
143.	படித்த	அது	→	படித்தது

பெயரெச்சங்களுக்கும் அவற்றையொட்டி வரும் பெயர்களுக்கு மிடையே நிலவும் தொடர்புகளே வினையாலணையும் பெயர்களிலும் பிரதிபலிக்கும். எடுத்துக் காட்டாக

144. பையன் பார்த்தான் — என்பதிலிருந்து

145. பார்த்த பையன் — என்பதும் அதிலிருந்து

146. பார்த்தவன் — என்பது உருவாகும் போது "one who saw" என்ற பொருளும்,

147. பையனைப் பார்த்தேன் — என்பதிலிருந்து

148. பார்த்த பையன் — என்பதும், அதிலிருந்து

149. பார்த்தவன் — என்பதும் உருவாகும் போது "one whom [someone] saw" என்ற பொருளும் தருதல் காணலாம்.

செய்வினையில் வரும் பெயரெச்சங்கள் செயப்பாட்டு வினையாகா என முன்னர்க் காட்டினோம். இதனால் பெயரெச்சம் பெயர் இவற்றின் இணைப்பிலிருந்து உருவாகும் வினையாலணையும் பெயர்களும் அத்தன்மையையேகொண்டு விளங்கும்.

150. அதைச் சொன்னான் → சொன்ன அது → சொன்னது "that [he] said"

151. அவரை ஏசு என்பார்கள் —> ஏசு என்னும் அவர் —> ஏசு என்பவர் "He whom [they] call Jesus"

152. அதை நன்னூல் என்பார்கள் —> நன்னூல் என்னும் அது —> நன்னூல் என்பது "that [they] call Nannul"

153. அதை எழுதினார்கள் —> எழுதின அது —> எழுதினது "that which [someone] wrote"

மேலே காட்டிய விளக்கங்கள் எவ்வாறு "சொன்னது", "என்பவர்", "என்பது", "எழுதினது" போன்ற வினையாலணையும் பெயர்கள் உருவாகின்றன என்பதைக்காட்டும். இவ் வினையாலணையும் பெயர்கள் செய்வினைகளைப் போன்றே (அவன் அடித்தான் போன்று) சாதாரணப் பெயர்ச் சொற்களையே (அவர்கள், நாம்) எழுவாயகக்கொண்டு வருகின்றன. (அவர்களால், நம்மால் போன்றவை அல்ல). இதனால்தான் அவற்றிற்கு ஆங்கிலத்தில் முறையே "that someone said", "He whom [we] call Jesus" (கால்டுவெல் தருவது போன்று He who was called Jesus அன்று) "that which [they] call Nannul", "that which someone wrote" எனப் பொருள் கூறி யுள்ளோம் இவையனைத்தும் செயப்பாட்டு வினையாயின் "ஆன்" வேற்றுமைச் சொல்லைக்கொண்டு வருதல் வேண்டும்.

154. *அவனால் சொன்னது

155. *நம்மால் ஏசு என்பவர்

156. *நம்மால் நன்னூல் என்பது

157. *நம்மால் எழுதினது

158. *நம்மால் படித்தது

எனக் கூறுதல் இலக்கணப் பிழையுடையன. ஆனால்

159. அவன் சொன்னது 160. நாம் ஏசு என்பவர் 161. நாம் நன்னூல் என்பது 162. நாம் எழுதினது 163. யாரோ படித்தது — என்பன இலக்கண வரம்பிற்குட் பட்டவை. இந்நிலையில் இவற்றை முறையே

164. சொல்லப்பட்டது 165. எனப்படுபவர் 166. எனப் படுவது 167. எழுதப்பட்டது 168. படிக்கப்பட்டது—என்பவற்று டன் பொருத்தி இரண்டும் ஒன்றுஎன கூறுவது பொருந்தாது.

(தொடரும்)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

பத்திரிகை முதல்வர் திரு. வி. க.

திரு சாலை இளந்திரையன், எம். ஏ., எம். லிட், டிப்-இன் யூ-என். ஐ யூ.

நாட்டுப் பற்று

நாட்டுப்பற்று உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டுவதற்குப் பல வழிகள் உள்ளன. இவ்வழிகளில் எது எது நமது நாட்டு மக்களுக்கு ஏற்றது என்பதைக் கண்டறிந்து காட்டுவதிலும் திரு. வி. க. வின் பத்திரிகை கவனம் செலுத்தியது. அவருடைய காலத்துக்கு அது பொருத்தமாகவும் இருந்தது.

காலஞ்சென்ற இந்திய முதல்வர் பண்டித நேரு ஒரு முறை ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தபோது, பின்வரும் கேள்வியை அவரிடம் கேட்டார் ஒருவர். "உங்கள் நாட்டுப் பத்திரிகைகளில் நீங்கள் பேசும் பேச்சுகளைவிட உங்களின் படங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதே; இது கண்மூடி வீரவணக்கத்தை ஏற்படுத்தும் தவறான போக்கு அல்லவா?" அதற்கு நேரு கூறிய பதில் இது: "என் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கல்வியில்லாதவர்கள். ஆகையால், நாட்டின்மீது ஈடுபாடு ஏற்படுத்த, எழுத்தையும் பேச்சையும் விட உருவத்தையே காட்டவேண்டியுள்ளது." கற்றறிந்து சிந்திப்பவர்களின் தொகை நாட்டிலே பெருகும் வரை உருவ வழிபாட்டின் மூலமே மக்களுக்குக் கருத்துக்களை ஊட்டமுடியும் என்பது இதன் கருத்து.

அக்காலத்தில், மக்களுக்கு நாட்டுப்பற்று ஊட்டமுனைந்த பெரியோர்கள் ஆங்கிலத்திலும் அரைகுறைத் தமிழிலும் பேசி வந்தார்கள். இவற்றால் போதிய பயன் விளையாது என்று சிந்தித்து உணர்ந்த திரு. வி. க., இத்திசையில் எத்தகைய நடைமுறை வெற்றி தரும் என்பதை அழகாக விளக்கி விவரிக்கிறார்.

"பாரதநாட்டில் பிறக்கும் மக்களுக்குப் பக்தியின் வாயிலாக உணர்ச்சி பிறப்பது வழக்கம். இவ்வுண்மை உணர்ந்த நம் முன்னோர்கள் ஈசுரபக்தியை வளர்க்கப் பல வழிகளைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவை ஆலய சேவை, திருவிழாக்

கள், வேதபாராயணம், பஜனை, பலவகை வேடங்கள், மடங்கள் அமைப்பு முதலியனவாகும். பாரதநாட்டிற் பிறந்த மக்களைத் தேசபக்தர்களாகச் செய்விக்க வேண்டுமாயின், நம் முன்னோர் தெய்வபக்தி வளர்ச்சிக்குக் கைக்கொண்ட முறைகள் போன்றனவற்றையே நாமும் (தேசபக்தி வளர்ச்சிக்கு) கைக்கொள்ளவேண்டும். இந்த யோசனையை, வாசா கைங்கர்யத்தால் போஷித் தேசபக்தியை வளர்த்துவரும் சில பெரியோர் மறுப்பர் என்பது நிச்சயம். அவரை, இந்திய தேச மக்களின் தன்மையை யுணராதவரென நாம் ஒதுக்குவோம். தற்கால நாகரிக வழியாகத் தேசபக்தியை வளர்க்க வேண்டுமெனக் கூறுவோர் முயற்சியால் கிராமவாசிகளுக்கு எவ்வகைப் பயனும் விளையாதென்பது திண்ணம். இவர்கள் பேச்சும் பட்டணங்களிலுள்ள சில உத்தியோகஸ்தர்களுக்கும் மாணாக்கர்களுக்குமே பயன் படுவதாகும். ஒரு கோயிலில் ஓர் உற்சவம் நடைபெற்றால் அதைக் காண எவ்வளவு ஜனங்கள் திரள்திரளாகச் செல்கின்றார்கள்! திருவண்ணாமலையில் கார்த்திகை உற்சவத்திற்கும், சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவத்திற்கும், ஸ்ரீ ரங்கத்தில் ஏகாதசி உற்சவத்திற்கும் கூடும் கூட்டத்துக்கு அளவு உண்டோ? கோடிக்கணக்கான ஜனங்களன்றோ கூடுகிறார்கள்! இதற்குக் காரணம் யாது? நம் முன்னோர்களின் அறிவு நுட்பமேயாகும். பலகோடி ஜனங்கள் ஒரே காலத்தில் ஓரிடத்தில் சேர்வதற்கு நம் முன்னோர்கள் குறிப்பிட்ட வழிகளும் ஏற்பாடுகளும் போற்றத்தக்கனவே. நம் முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் செய்த ஏற்பாடுகள் இன்னும் நின்று பயன்தந்து கொண்டேயிருக்கின்றன. அவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதே நமது கடமை.

"இப்பொழுது தமிழ்நாட்டளவில் தேசபக்தியை வளர்க்கு முறைகளை எல்லைப்படுத்துவோம். பண்டைக் காலத்தில் தெய்வபக்தியை வளர்த்தவர் பெரும்பாலும் முனிவரேயாவர். அவர்கள் லௌகிக காரியங்களில் பெரிதும் தலையிடுவதேயில்லை; வைதிக காரியங்களிலேயே தங்கள் காலத்தைக் கழித்து வந்தார்கள். அவர்களை இல்லறத்தார்கள் போஷித்து வந்தார்கள். அதுபோல் இப்பொழுது தேசபக்தியை வளர்க்க ஒரு கூட்டத்தார் புறப்பட வேண்டும். அக்கூட்டத்தாருக்கு எவ்வகைப்பற்றும் இருத்தல் கூடாது. அவர்கள் தேச

பக்தியை வளர்க்கும் ஒருபற்றிலேயே பற்றுடையவர்களா யிருத்தல் வேண்டும். அவர்கள் ஒன்றுகூடி தேசபக்தியை வளர்க்க வேண்டிய முறைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ளல் வேண்டும். அவர்களை ஊரவரே போஷிக்கவேண்டும்.

"முதல்முதல் இக்கூட்டம் தலைநகராகிய சென்னையில் சேரவேண்டும். அக்கூட்டம் "தேசபக்த சமாஜம்" என்னும் பெயரால் அழைக்கப்பட வேண்டும். அச்சமாஜம் ஜன நெருக்கமில்லாத ஓரிடத்தில் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். ஆங்கே பாரததேவி திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும்; தேசபக்தியூட்டக் கூடிய உற்சவங்கள், பிரசங்கங் கள், பஜனைகள், முதலியன நடைபெறல் வேண்டும். ஜனங் களுக்குத் தேசபக்தியில் ஆவேசம் உண்டாக்கக்கூடிய மற்றும் பல செயல்களையுஞ் செய்தல் வேண்டும். அச்சமாஜத்தில் சேர்வோர் கூட்டங்கூட்டமாகக் கிராமங்கட்குச் சென்று வந் தேமாதர முழக்கத்தோடு தேசபக்தி ஊட்டக்கூடிய பாடல் களை இன்னிசைக் கருவிகளுடன் பாடிக்கொண்டு உபந்நி யாசங்கள் செய்ய வேண்டும். இவ்வழியொன்றே தமிழ்நாட் டில் தேசபக்தியை வளர்க்கத் தக்கதாகும்." [27]

திரு. வி. க. இக்கருத்தை வெளியிட்டு நாற்பது ஆண்டு கள் சென்றுவிட்டன. இந்த நாற்பது ஆண்டுகளில் நாட்டிலே கல்வி வளர்ந்துள்ளது; அரசியல் விழிப்பும் ஓரளவு ஏற்பட் டுள்ளது. இன்றைய நிலையில் திரு. வி. க. கூறிய யோசனை பழமையாகிவிட்டது. ஆனால் "கல்வியின்றி உரிமையின்றிக் கடைத்தேற வழியின்றிக்" கிடந்த அக்கால மக்களின் உள்ளத் தில் உணர்ச்சி எழுப்ப அவர் கூறிய "உருவ வழிபாட்டுப் பக்திநெறி" வழியே சிறந்ததாக இருந்ததென்பதை யாரும் மறுக்க முடியாது. காலத்தை ஒட்டியே வழியை வகுத்துக் காட்டும் இத்தெளிவு சிறந்த பத்திரிகையாளர்களுக்கு எப் போதும் இருக்க வேண்டும்.

தெளிவு தர...

இலக்கிய ஆசிரியர்கள் கூடத் தாம் வாழும் காலத்தின் தாக்கத்துக்கு ஓரளவு ஆட்படுகிறார்கள் என்பது எல்லாரும் அறிந்த உண்மை. பத்திரிகைகள் பெரும்பாலும் உடன்காலப் பிரச்சினைகளை அலசிச் செல்லுபவை; அப்பிரச்சினைகளின்

27. தேச பக்தன் : 11—10—1918.

உண்மை நிலையை மக்களுக்கு விளக்க முயல்பவை. செய்திகளைத் தேர்ந்து வெளியிடுவது பத்திரிகைகளின் முக்கியப்பணி என்றாலும், சிக்கல்களுக்கு அவை பராமுகமாக இருக்க முடியாது.

திரு. வி. க. வின் பத்திரிகைகள் நடைபெற்ற காலத்தில் தேசீயப் போராட்டம் ஒரு பக்கம் எழுந்துநின்றது; சமுதாய (சாதி, சமய)ச் சீர்திருத்தம் ஒருபக்கம் வேகங்கொண்டு வந்தது. இவற்றைப் பற்றிய செய்திகளை அவ்வப்போது வெளியிட்டு வந்ததோடு இவைகளில் மக்கள் எந்த நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் விளக்கி வந்தார் திரு. வி. க.

தேசீயக் கல்வி

அக்காலத்தில் எழுந்த தேசீயக் கல்வி இயக்கம் படித்தவர்களிடையே பெரிய கருத்து வேற்றுமையை ஏற்படுத்தி வந்தது. "தமிழ்நாட்டார் தமிழை மறந்தார்கள்; சுதந்திரத்தையிழந்தார்கள்; ஆங்கிலமயமாக விளங்குகிறார்கள். தமிழ் மக்கள் முன்னேற்றத்துக்கென வெளிக் கிளம்பிய டாக்டர் நாயர் மேல்நாட்டு நாகரிகங்கள் இந்தியாவிற் பரவிய பின்னரே ஜனப் பொறுப்பாட்சி கொடுக்கப்பட வேண்டுமென்று எழுதுகிறார்; பேசுகிறார். அவருக்குத் துணையாக மிஸ்டர் ஓ. கந்தசாமி செட்டியும் புறப்பட்டிருக்கின்றார். இவர்கள் தமிழ்மக்கள் வழக்க ஒழுக்கங்களை மாற்ற முயலுகின்றார்கள்.[28]

நாட்டு மக்களின் முன்னேற்றம் பற்றிய கொள்கை இப்படி இருபறியாக இருந்த சமயத்தில் திரு. வி. க. வின் "தேசபக்தன்", தனது நம்பிக்கைக்கும் கோட்பாட்டுக்கும் ஏற்ப மக்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தத் தயங்கவில்லை; "இப்பொழுது நம்முடைய தலைவர்கள் சுய ஆட்சிபெற முயற்சி செய்துவருகிறார்கள். அச்சுய ஆட்சி பெறுவதற்குள் தாம் நமது நாட்டிற்குரிய கல்வித் துறைகளை முறைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். சுய ஆட்சி முயற்சியிலும் பதின் மடங்கு அதிகமாக நாட்டுக்கல்வி முயற்சி எழல் வேண்டும். இவ்வுண்மை உணர்ந்த அன்னிபெசண்ட் அம்மையார் சுய ஆட்சிக் கிளர்ச்சியைத் தொடங்கி அதனையொட்டியே நாட்டுக்

28. தேச பக்தன்: 4—1—1918.

கல்வி முயற்சியிலுந் தலைப்பட்டிருத்தலைக் கவனிக்க. நாட்டுக் கல்வி வரின் இந்தியாவின் பண்டைக் கல்வித்துறைகள் யாவும் மீண்டும் உயிர்பெறும். மேனாட்டுக் கல்வி பரவிய நாள்தொட்டு, நம்நாட்டு நூற்கல்வி, தொழிற் கல்வி, வியாபாரக்கல்வி, விவசாயக் கல்வி, சமயக்கல்வி முதலிய எல்லாக் கல்விகளும் அழிந்தன. பிறநாட்டுக் கல்வியால் நமது நாட்டில் அடிமைத்தொழில் நிலைத்து நிற்கிறது. சுதந்தரம் வேரற்றுப்போய்விட்டது. சுதந்திரமில்லாத நாடு சுடுகாடேயாகும். எல்லா நாட்டவரைப் போலச் சுதந்தரம் பெற்றுவாழ வேண்டுமானால், தேசபக்தி யூட்டக்கூடிய நமது நாட்டுக் கல்வியை வளர்க்க முயலல் வேண்டும். தேசபக்திக்கு இடையூறு செய்யுங் கல்வி தேசநலத்தைக் கெடுப்பதாகும். தேசபக்தி யாண்டு இல்லையோ ஆண்டுத் தெய்வபக்தியும் இல்லையென்று கூறலாம். நமது நாடு தெய்வ பக்தியில் பேர்பெற்றது. இப்பொழுது மாணாக்கர்கள் தெய்வ உண்மையிலேயே அவநம்பிக்கை கொள்கிறார்கள். தெய்வபக்தியை விரும்புவோர் நாட்டுக்கல்வியை நாடல் வேண்டும்.''[29]

வேற்றுமை தீர்க்க ...

சாதி வேற்றுமையும் அதனால் வரும் ஏற்றத் தாழ்வும் நமது சமுதாயத்தை நீண்ட காலமாகப் பற்றி வந்துள்ள நோய்கள். இவற்றை ஒரு வகையில் போக்க் முயன்ற ஆங்கில அரசாங்கத்தார், இப்பிளவுகள் மாய்ந்தால் தாங்கள் இங்கே கொலுவீற்றிருக்க முடியாது என்பதை உணர்ந்து, தாழ்த்தப்பட்டவர்களின் நெஞ்சிலே மற்றவர்களைப் பற்றிய வெறுப்பை ஏற்றிக்கொண்டு வந்தார்கள். இந்த மாயவலையில் பலர் விழுந்து, பிராமணருக்கு எதிரான கொடியை உயர்த்திப் பிடித்தார்கள். இப்போக்கை நீடிக்கவிட்டால் வரக்கூடிய தீய விளைவுகளை அறிந்த தேசீயத் தலைவர் சிலர் இப்பிரச்சினையை விளக்கித் தெளிவுபடுத்த முனைந்தார்கள். அப்பணியில் தேசபக்தனும் முன்நின்றது.

''பஞ்சமரென்போர் இந்தியாவின் பூர்வக்குடிகளில் ஒரு வகுப்பார். இக்கூட்டத்தார் பிராமணராலும் மற்றவராலும் நீண்டகாலமாகச் சிறுமைப்படுத்தப்பட்டவர். பிரிட்டிஷ்

29. தேசபக்தன் : 2—4—1918

ஆட்சியில் இவர்களது அடிமைத்தன்மை நீங்கி வருகிறது. பிராமணர் என்னும் உயர்ந்த வகுப்பாருள் பலர் பஞ்சமருக்காக உழைக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். "பஞ்சமனைக் காண்டலுமாகாது; அவனைத் தீண்டலுமாகாது" என்னும் கொள்கை பறந்துவிட்டது. எல்லா ஆன்மாக்களும் கடவுள் சொரூபம் என்ற நம் முன்னோர் கொள்கை எங்கணும் பரவி வருகிறது. ஆங்கிலங்கற்றுத் தற்கால நாகரிக உணர்ச்சி பெற்றுள்ள பிராமணரிற் பெரும்பாலோர் பஞ்சமர் முன்னேற்றத்துக்கு உழைத்து வருகின்றனர். பஞ்சமர்களிலும் சிலர் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவராய்ப் பிராமணரோடு கலந்து உழைக்கின்றனர். இந்தியாவில் இடைக்காலத்துத் தோன்றிய சாதிவேற்றுமை முதலியன சாகுங்காலம் இக்காலமேயாகும். சில பிராமணர்கள் பல பஞ்சமப் பாடசாலைகளுக்குப் போஷகர்களாகவுமிருந்து வருகிறார்கள். இங்ஙனம் இருவகுப்பாரும் ஒற்றுமைப்பட்டும் ஒற்றுமைப்படவும் வாழ்ந்து வருங்காலத்துச் சிற்சில தேசத் துரோகிகள் அவ்வொற்றுமையைக் கெடுத்துவிட்டார்கள். சில பஞ்சம சகோதரர்கள் பிராமண சகோதரர்கள் செய்யும் உதவியைப் பெறலாகாதென்றும் அவர்களைப் பெரும் பகைவர்களாகப் பாவிக்க வேண்டுமென்றும் தீர்மானஞ் செய்ததாகக் கேள்விப் படுகிறோம். வேறு சில பஞ்சம சகோதரர்கள் அத்தீர்மானத்துக்கு உடன்படாமல் எல்லாரிடத்திலுஞ் சகோதரத்தன்மை பூண்டொழுகல் வேண்டும் என்ற எண்ணமுடையராக இருப்பதைக் கேட்டு மகிழ்வெய்துகிறோம்."[30]

"பிராமணர் முதலியார் என்போர் தங்கடவுளை வழிபடும் பறையரைத் தாழ்வாக நினைக்கின்றனர். அவர், கிறிஸ்துவர்களையும், மகமதியர்களையும், ஐரோப்பியர்களையும் அங்ஙனம் பாவிக்கின்றாரில்லை. பண்ணையில் வேலைசெய்யும் பொன்னன் மகன் கிறிஸ்துவனாகி, பீ. ஏ. பரீட்சையில் தேறி, டெபுடி கலெக்டராகிக் குதிரை மேலேறிக்கொண்டு கிராமத்துக்கு வருவானாயின் பிராமணரும் முதலியாரும் அவனைக் கண்டவுடன் தண்டனிட்டு நிற்கின்றனர். பறையனாக உள்ள ஒருவனை நம்மவர் தாழ்வாக நினைக்கின்றனர். அவனே கிறிஸ்தவனாய் விடின், அவனை முன்போல் பாவிப்பதில்லை.

30. தேசபக்தன் : 25—12—1917

இது கண்ட பஞ்சம சகோதரர்களில் எண்ணிறந்தோர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுகின்றனர். அவர் பறையர் என்று தம்மைச் சொல்லிக்கொள்ள கூசுகின்றனர் இது போன்ற கஷ்டங்கள் பலவற்றையும் அனுபவித்துக்கொண்டு இன்னும் ஆயிரக்கணக்கான பஞ்சம சகோதரர்கள் ஹிந்து மதத்தைத் தழுவி வாழ்கின்றார்கள். பாவம், அவர்களைக் கவனிக்க வேண்டிய கடமை உயர்வகுப்பாரைப் பொறுத்து நிற்கிறது.

"சில வைதிகர்கள் 'சாதிவேற்றுமை நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளுக்குமாறாக நடத்தலாகாது' என்று கூறுகின்றார்கள். நூல்கள் ஒவ்வொரு காலத்துப் பெரியோர்களால் அவ்வக்காலத்துக்குத் தக்கவாறு எழுதப் பட்டவை. அக்காலத்துப் பெரியோர்கள் கூறியவாறு நடந்து வருவதுபோல இக்காலத்துப் பெரியோர்கள் கூறும் வழி நின்றொழுகுவது நம் பெருங்கடமை. இக்காலத்துப் பெரியோர் யார்? இக்காலத்துப் பெரியோர் மஹரிஷி திலகர், மஹாத்மா காந்தி முதலியோர்"[31]

காந்தியடிகள் போன்ற பொதுநலத் தலைவர்களின் செல்வாக்கு ஓங்கி வந்த காலத்திலேயே, சாதிமதக் காழ்ப்புக்களும் அவற்றின் வளர்ச்சிக்கான இயக்கங்களும் தோன்றி வளரலாயின. சாதிகளை உள்ளது உள்ளபடித் தனிப்படுத்தி அவற்றிற்கு அரசாங்கத்தில் உரிய பிரதிநிதித்துவம் கொடுத்தால் தான் பிரச்சினை தீரும் என்று அந்த இயக்கங்களைச் சேர்ந்தோர் கருதினார்கள். அதன் விளைவாகப் பிராமண எதிர்ப்பும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ வேட்கையும் தமிழகத்தில் பொங்கின. இவைகளைப் பற்றிச் சிந்தித்து, ஒரு நடுநிலைக் கொள்கையை வெளியிட்டார் திரு. வி. க.

"தமிழ் நாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எக்காரணம் பற்றிக் கேட்கப்படுகிறது என்பது நேயர்கட்குத் தெரியும். அரசாங்க பீடங்களில் பிராமணர்களைப் போல மற்றவர்களும் அமரவேண்டுமென்பது வகுப்புவாதமிடுவோர் நோக்கமாம். நாட்டிலுள்ள எல்லா வகுப்பார்க்கும் வழங்கும் பீடங்கள் அரசாங்கத்திலுண்டோ என்பது முதலாவது

31. தேசபக்தன் : 27—3—1918

கவனிக்கற்பாற்று. திருநெல்வேலியில் வேளாளர்க்கு மாறுபட்டு மற்றவர் கிளர்ச்சி செய்கின்றனர். தென்னார்க்காட்டில் ரெட்டிமார்களுக்கு மாறுபட்டு மற்றவர் கிளர்ச்சி செய்கிறார். மற்ற இடங்களிலும் இத்தகை மாறுபாடுகள் உண்டு. பிராமணரல்லாதாருள் பல வகுப்பினர் கூடும் மாநாடுகளில் அவரவர் தத்தம் வகுப்பினர் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமென்று வேண்டுகிறார். கிறிஸ்துவர்களுக்குள் புரோடஸ்டென்ட், கத்தோலிக் வேற்றுமையை வகுப்பு நினைவு கிளப்பியிருக்கிறது. வகுப்புகள், வகுப்புக்குள் வகுப்பாகப் பிரிந்துகொண்டே போனால் நாடு உரிமைபெறல் எப்பொழுது?

"மற்றுமொன்று கவனிக்கப்படல் வேண்டும். இதுபோழ்து பிராமணர்கள் ஆதிக்கம், மற்றவர் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துகிறது என்று சொல்லப்படுகிறது. சிறு தொகையினராக உள்ள பிராமணர்கள் அந்நிலை எய்தியதற்குக் காரணமென்னை? அவர்கள் கல்வியாலும் முயற்சியாலும் ஆதிக்கம் பெற்றிருப்பது உண்மையே. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அவ்வாதிக்கத்தை எவ்வாறு குறைக்கும்? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் போட்டியை அழித்தலால் பிராமணரல்லாதாரையும் மற்றவரையும் கல்வியிலும் முயற்சியிலும் முன்னேற்றமடையச் செய்யாது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பிராமணரல்லாத ஜமீன்தார்களைச் சட்டசபையில் நுழையுமாறு செய்து, ஏழை மக்களை இடர்ப்படுத்துவதாகும். பிராமணரல்லாதார் ஊக்கத்தை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவங் குலைக்கும் என்பதில் ஐயமில்லை.

"தீண்டாதார், வைக்கத் திருவீதியில் போதல் கூடாதென்னுங் கட்டையறுக்கத் திரு. இராமசாமி நாயக்கர் முயன்றார்; வெற்றியும் பெற்றார். தொடக்கத்தில் எதிர்த்த பிராமணர்கள் இப்பொழுது இணங்கி விட்டார்கள். உற்ற குறைகளைச் சத்தியாக்கிரக முறையால் களைவது சிறந்த உரிமைப் போராகும். அப்போர் நிகழ்த்த வேண்டிய இடங்கள் பலப்பல உண்டு. அப்போருக்குத் துணைபுரிய பிராமணரிலும் பலர் சித்தமாயிருக்கிறார். வைக்கச் சத்தியாக்கிரகப்போரில் எல்லாச் சாதியாரும் தலைப்பட்டுழைத்தது அன்பர் நாயகருக்குத் தெரியும்.

[தொடரும்]

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகள்

திரு அருள்செல்வநாயகம், குருமண்வெளி, இலங்கை.

இன்றல்ல! நேற்றல்ல! சென்ற திங்களல்ல! கடந்த ஆண்டல்ல! வெகு ஆண்டுகளுக்கு முன்னர். ஆமாம். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் நாள்!

சேர மன்னன் நெடுஞ்சேரலாதனது அவைக்களத்தே நிமித்திகன் ஒருவன் புகுந்தான். நிமித்திகனை வரவேற்ற சேர மன்னன், தனது மைந்தர்கள் இருவரினதும் வருங் காலப் பலாபலனைக் கூறும்படி கேட்டான். சேர இளவரசர் இருவர்களது கைரேகைகளையும் பார்த்த நிமித்திகன், இளையவனான இளங்கோ தான் தங்களுக்குப் பின்னர் சேர மன்னனாகத் துலங்குவான் எனக்கூறினான். அவ்வளவு தான் மூத்தவனான செங்குட்டுவன் அனல்தெறிக்க நிமித்திகனை நோக்கினான். கோபத்தினால் அவையினின்று எழுந்தான். தமையனது நிலையினைக் கண்ணுற்ற இளவலான இளங்கோ "நிமித்திகனது வார்த்தைகளையே நான் பொய்யாக்கி விடுகிறேன்" எனக் கூறினான். அதற்கிணங்க அரச போகங்களையும், இல்லற வாழ்க்கையையும் துறந்து காவி ஆடைபுனைந்து துறவியானான் இளங்கோ.

லக்கி வியா சூரிய	சுக்கி புதன் ராகு	3	4
சந்தி	மீன லக்கினம்		5
செவ்	நட்சத்திரம் பூரட்டாதி		6
10	9	கேது	சனி

நிமித்திகனது வாக்கினை இளங்கோ பொய்யாக்கினான். ஆனால் நிமித்திகனது வாக்குப்போல் இளங்கோ சேர நாட்டைக் கட்டியாளும் புவி அரசனாகாமல், தமிழ் மக்கள் அனைவரையும் கட்டியாளும் இணையில்லாக் கவி அரசானான்.

சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியத்தால் இளங்கோ அடிகள் என்றென்றும் தமிழ் மக்களால் போற்றிப் புகழ் பாடும் பெருமையைப் பெற்றார்.

சிலப்பதிகாரம் தமிழ் உள்ளளவும் தமிழைப் பேசுபவர்கள் உள்ளவும் சிரஞ்சீவியான இடத்தைப் பெற்றுக்கொண்ட இளங்கோ அடிகளாரின் மறுஅவதாரம் என்று போற்றும் வண்ணம் 1892-ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 27-ஆம் நாள் (19—7—1892) மட்டக்களப்பு நாட்டிலுள்ள காரைத்தீவில் கண்ணம்மையார் என்னும் சீமாட்டியார் ஓர் புதல்வனைப் பெற்றெடுத்தார்.

குழந்தையைத் தூக்கி உச்சி முகர்ந்த தந்தையான சாமித்தம்பியார் மயில்வாகனன் என்னும் அழகிய பெயரைச் சூட்டி அகம் மகிழ்ந்ததுடன் பிறப்புக் குறிப்பைக் கணித்தலும் செய்தார்.

எட்சியில் (இலக்கினத்தில்) வியாழன் கதிரவன்
இரண்டாமிடத்தில் வெள்ளி, மால், கரும்பாம்பு
ஏழாமிடத்திற் காரி
எட்டாமிடத்திற் செம்பாம்பு
பதினோராமிடத்திற் செவ்வாய்
பன்னிரண்டாமிடத்தில் திங்கள்

இவ்வாறு கோள்கள் பிறந்த வேளையில் உள்ளபடி அமைந்தன. அக்கோள்கள் மேற்கூறியவாறு அமைந்து நின்றதனால் ஆகும் பயன்களாவன :—

ஆரும் வீட்டிற்குரிய ஞாயிறு எட்சியில் நிற்பதால் எதற்கும் அஞ்சாத உள்ளநிலை, சிறந்த பண்பாடு, அழகிய விழிகள், அன்பு மாண்புடைய மானம், சினம் என்பவைகளைக் கொடுக்கும்.

பத்தாம் வீட்டிற்குரிய வியாழன் எட்சியில் நிற்பதால் குலச்சிறப்பு, அலுவல், அரசியற்பணி, உயிர்நலம் பேணல், மனத்திட்பம், இறைத்தன்மை எய்தல், நன்னெறியிற் செல்வோரிடத்தில் அன்பு செய்தல், அவர்க்குச் சிறப்பு வழங்குதல் என்பவைகளைக் கொடுக்கும்.

நான்கு ஏழுக்குரிய மால் இரண்டில் நிற்றலால் நன்மொழி, சொல்லாற்றல், கல்வி விருப்பம், கணித வன்மை, பலகலையுணர்ச்சி, தூயஉள்ளம், இன்சொல், குளிர்ந்த நோக்கம், வரலாறு கூறல், கலைகளிற் பயிலுதல், நடுவு

நிலைமை, மெய்ம்மொழி கவரும் முகம், அரசியற்பணி, அவையஞ்சாமை, புகழ், சிறந்த கல்வி, அறிவு, ஆசிரியரிடத்தில் அன்பு இவையுண்டாம்.

மூன்று எட்டுக்குரிய வெள்ளி இரண்டில் நிற்பதால் கல்வி விருப்பம் ஈதற்சிறப்பு மெய்ம்மொழி இலக்கியப் படைப்பு முன்னோர் தம் ஒழுக்கத்தைப் பின்பற்றல் என்பவைகளைத் தரும்.

இரண்டாம் வீட்டில் கரும்பாம்பு நிற்றலால் பலரும் உவக்கும்படி நகைமொழி கூறல் மந்திரக் கலைப்பயிற்சி, மேன்மையான சொற்கள், உள்ளவலிவு என்பவைகளைத் தரும்.

பதினொன்று பன்னிரண்டுக்குரிய காரி ஏழில் நிற்றலால் இடைப்பட்ட வாழ்நாள், பல நாடுகளுக்குச் செல்லுதல், அஞ்சாத உள்ளம், மருத்துவ நூலுணர்ச்சி என்பவைகளைத் தரும்.

எட்டாம் வீட்டிற் செம்பாம்பு நிற்றலால் அறிவிற்கு உறைவிடமானவன். அக்கோள் இரண்டினைப் பார்த்தலால் வீட்டியலறிவு, சொல்லாற்றல், பொருட்பற்றின்மை, அறம் பயக்கும் இடங்கட்குச் செல்லுதல் என்பவைகளைத் தரும்.

பதினொன்றில் செவ்வாய் உச்சம் பெற்று இரண்டினைப் பார்த்துக்கொண்டு நிற்றலால் உண்மை மொழி, உறுதியான சொல், மகிழ்ச்சியுடைமை, ஒளி என்பவைகளை வழங்கும்.

வியாழனுக்குப் பன்னிரண்டில் திங்கள் நிற்றல் சகட யோகமாம். அதனால் அது எதையும் பொருட்டாக மதியாத வன்மையைத் தரும்.

மீன எட்சியின் பொதுப்பலனை நோக்கினால் சிறிது அவா, நினைவுள்ளம், கடவுள் அன்பு, பெரியோரிடத்தும் அன்பு, வீரம், அறிவு மேன்மை, மணமலரில் விருப்பம், செயலில் விழிப்புணர்ச்சி செவிநோய், மந்திரக்கலைப் பயிற்சி, எவர்க்கும் நலம் கூறல், குற்றமான சொல்லைக் கடைப் பிடியாமை, வெகுண்டால் விரைவில் ஆறுதல், பகைவரும் விழையும் பண்பு, அரசரால் நன்கு மதிக்கப்பெறுதல், நன்றி மறவாமை, சில செயல்களை ஆக்கவும் அழிக்கவும் செய்யும் ஆற்றல், சேய்மையான வழி நடக்க அஞ்சாமை என்னும் இவை உண்டாதலாம்.

சாதகத்தைக் கணித்துப பலன் சொல்லக்கேட்ட சாமித் தம்பியார் அகம் மகிழ்ந்தார். தாயார் கண்ணம்மையார் பெரும் மகிழ்வு கொண்டார். பெரும்புகழுடன் பிற்காலையில் துலங்கப் போகும் மயில்வாகனனைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து கல்வி புகட்டினார்கள்.

திரு. நல்லரெத்தினம் தொடக்கம் செய்துவைக்க குஞ்சுத்தம்பி ஆசிரியர் ஆரம்பக் கல்வியைப் கற்பித்தார். மேலும் மயில்வாகனனார் திரு. வசந்தராச பிள்ளை அவர்களிடமும், தந்தையாரிடமும் பாடங்கள் கேட்டுப் படித்துவந்தார். அத்துடன் வைத்தியலிங்கத் தேசிகரிடம் நன்னூல், சூடா மணி, நிகண்டு முதலியவைகளைக் கற்றதுடன் வடமொழியை யும் பயின்றார்.

மயில்வாகனனார் பத்துவயது வரை காரைத்தீவுத் தமிழ்ப் பாடசாலையில் தமிழ் கற்றதுடன், வீட்டிலே ஆங்கிலத்தையும் கற்றுவரலானார் பின்னர் ஆங்கிலக் கல்வியைக் கற்கும் பொருட்டுத் தந்தையார் 1903-இல் கல்முனை மிசன் ஆங்கிலப் பாடசாலையில் சேர்த்தார். மயில்வாகனனார் தொடர்ந்து கற்றுக்கொண்டு செல்ல அங்கு வகுப்புகள் இல்லாமையினால் மட்டக்களப்பிலுள்ள அர்ச்மிக்கேல் கல்லூரியில் சேர்க்கப் பட்டார். அங்கு படித்ததின் பயனாக 1908-ஆம் ஆண்டு மயில் வாகனனார் கேம்ரிட்ச் சீனியர் தேர்வில் சித்தி எய்தினார். அதன் பெறுபேருகப் படித்த கல்லூரியிலே ஆசிரியரானார். இரண்டாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய போது, அன்னையார் மரணத்திரையால் மறைக்கப்பட, ஆசிரியர் பணியைத் துறந்து மயில்வாகனனார் காரைத்தீவினுக்கு வந்தார். பின்னர் கல்முனை கத்தோலிக்கமிசன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து பணிபுரியலானார். இக்காலையில் ஆசிரியர் புதுமுகத் தேர்வில் தேறியதனால். ஆசிரியர் பயிற்சிபெறும் பொருட்டுக் கொழும்பினுக்குச் சென்றார்.

பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியராக வெளியேறிய மயில்வா கனனார் மட்டக்களப்பு அர்ச்மிக்கேல் கல்லூரியில் ஆசிரியரானார். 1914-ஆம் ஆண்டு பொறிஇயல் கல்லூரியிற்சேர்ந்து விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்றார். இக்காலையில் மயில் வாகனனார் கொழும்பில் வாழ்ந்த பண்டிதர் கந்தையர் பிள்ளை, வித்துவான் தாமோதரன் பிள்ளை, வித்துவான் கைலாசபிள்ளை

ஆகியோர்களிடம் சங்க இலக்கியங்களை முறையாகப் பாடங் கேட்டார். 1916ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் தேறி, இலங்கையில் முதன் முதலாகப் பண்டிதர் பட்டம் பெற்றவர் என்ற பெருமையை மயில் வாகனனுர் ஈட்டினுர்.

1916ஆம் ஆண்டு மயில்வாகனனுர் அரசினர் பொறிஇயல் கல்லூரியில் உதவி இரசாயன ஆசிரியராகப் பதவி ஏற்ருர். சில மாதங்களில் அப்பதவியினைத் துறந்து 1917-ஆம் ஆண்டு சம்பத்தியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகச் சேர்ந்து பணிபுரியலானுர்.

இரண்டு ஆண்டுகளாக மாணவர்களை வழிநடத்திய துடன், தம்மையும் புதியதோர் தேர்வினுக்குத் தயார் செய்து கொண்டார். பிறர் உதவியின்றித் தாமாகவே படித்து இலண்டன் பல்கலைக்கழகம் நடத்திய B Sc. தேர்விலே தேறிப் பட்டதாரியானுர்.

பண்டிதர் மயில்வாகனனுரின் புலமையை அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி நிர்வாகத்தினர் முதல்வர் பதவியினை ஏற்கும்படி வேண்டினுர்கள். அதற்கிணங்கிய மயில் வாகனனுர் 1920-இல் இந்துக் கல்லூரி முதல்வரானுர்.

இலங்கையில் தமிழ்மொழியை வளர்க்கவோ, பேணிக் காக்கவோ சிறந்த நிலையங்கள் இல்லாமையைக் கண்ணுற்ற மயில்வாகனனுர் தமிழ் வளர்ச்சிக்கழகம் ஒன்றினை நிறுவ முனைந்தார். யாழ்ப்பாணத்துப் பெரியோர்கள் பலரின் துணை கொண்டு, தனி முயற்சியின் பயனுக ஆரியதிராவிட பாஷா விருத்திச் சங்கத்தை நிறுவினுர்.

உலகவரலாற்றிலே 1914ஆம் ஆண்டு பயங்கரமான மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுதான் முதலாவது உலகப் பெரும் போர். பணி செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட மயில் வாகனனுர் போர்வீரராகி நாட்டினுக்குப் பணிபுரிய முயன்ருர். அந்த முயற்சியிலே சில ஆண்டுகள் ஈடுபட்டுச் சிந்தித்து முன்வந்த காலையில் உலகப் பெரும்போரும் ஓர் முடிபினுக்கு வந்தது. ஆகவே மயில்வாகனனுரின் போர்ப்பணி தேவையற்றதாகியது.

நாட்டுக்குச் சேவை செய்ய வாய்ப்புக் கிடைக்கா விட்டாலும் நாட்டு மக்களுக்கு, மக்களின் மொழிக்கு,

மக்களின் சைவ நெறிக்கு மயில்வாகனனார் பணிபுரிய விரும்பினார். அதன் பயனாக 1922-ஆம் ஆண்டு துறவியாகித் தூய வாழ்வு வாழ்ந்து மக்களுக்குப் பணி செய்வதற்காக சென்னை இராமகிருஷ்ண மடாலயத்துக்குச் சென்றார். மடாலயத்தில் துறவியாவதற்குரிய நியமங்களைக் கடைப்பிடிக்க முனைந்தபோது பண்டிதர் மயில்வாகனனாருக்கு பிரபோதசைதன்யர் என்ற பிரமச்சாரியப் பெயரை வழங்கினார்கள்.

பிரபோத சைதன்யர் மடாலய வாயிலாக வெளிவரும் திங்கள் இதழான "ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்" என்னும் தமிழ் இதழினுக்கும் "வேதாந்த கேசரி" என்னும் ஆங்கில இதழினுக்கும் ஆசிரியராகிப் பணிபுரிந்தார்.

1924ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் முழுமதி நாளன்று சுவாமி சிவாநந்தா அவர்கள் பிரபோத சைதன்யருக்கு ஞான உபதேசம் செய்து விபுலாநந்தர் என்னும் துறவறப் பெயரை வழங்கினார்.

விபுலாநந்த அடிகளாக, அடிகளாரின்பணி தொடங்கியது மடாலயத்தில் வாழ்ந்த காலையில் விவேகானந்த ஞானதீபம், கர்மயோகம், ஞானயோகம், நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்தர் சம்பாஷணைகள் என்னும் நூல்களை மொழிபெயர்த்தார்.

ஆங்கிலப் பெரும்புலவரான சேக்சுபியரின் நாடகங்களை அடிகளார் விரும்பிப்படித்தார். அத்தகைய ஓர்சூழ்நிலையைத் தமிழில் ஏற்படுத்துவதற்கு எண்ணங்கொண்டார். 1924ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளவும், நாடகத்தமிழ் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றவும் அடிகளாருக்குத் தருணம் கிடைத்தது மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செயலாளரான திரு டி. வீ. சீனிவாச ஐயங்கார் அடிகளாரின் விரிவுரையினை ஓர் நூலாக்கித் தரும்படி வேண்டினார். அதற்கியைந்த அடிகளார் சேக்சுபியரின் நாடகங்களையும், தனஞ்செயரின் தசரூபத்தையும் மூலக்கருவாகக் கொண்டு சிலப்பதிகாரத்திலுள்ள நாடகநூன்முடிபுகளை ஓரளவு விளக்கிக்காட்டுதற்கு ஏற்றதாக மதங்கசூளாமணி என்னும் நூலினை எழுதினார். இதனை மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஏடான

"செந்தமிழ்" தொடர்ந்து வெளியிட்டு இறுதியில் நூலாகவும் வெளியிட்டது.

இலங்கை திரும்பிய அடிகளாருக்கு கிழக்கு இலங்கையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிசன் கல்வி நிலையங்களைப் பராமரிக்கும் முகாமையாளர் பதவி கையளிக்கப்பட்டது.

முகாமையாளராக அடிகளார் பணியாற்றிய பொழுது காரைத்தீவில் சாரதா வித்தியாலயத்தையும், கல்லடியில் சிவாநந்தா வித்தியாலயத்தையும் நிறுவினார் பின்னர் சிவாநந்த வித்தியாலய தலைவராகவும், திருக்கோணமலை இந்துக் கல்லூரி தலைவராகவும் பணிபுரிந்தார்.

சிதம்பரத்திலே ஓர் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட பொழுது, பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பேராசிரியர் பதவியினை கையேற்கும்படி அண்ணாமலைச் செட்டியார் கோரினார். அதற்கிணங்கிய அடிகளார் 1931ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பதவியேற்றார்.

இக்காலையில் அடிகளார் சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்ற பழந்தமிழர்களின் யாழ்களைக் கண்டுபிடிக்கும் பெரும் பணியில் ஈடுபட்டார். இவ்வாராய்ச்சியினை நிறைவேற்றும் முகமாக 1933ஆம் ஆண்டு தமிழ்ப்பேராசிரியர் பதவியினைத் துறந்தார்.

இமயமலைச் சாரலில் உள்ள மாயாவதி ஆச்சிரமத்தினுக்குச் சென்று 1939ஆம் ஆண்டு "பிரபுத்தபாரத" என்னும் ஆங்கில இதழினுக்கு ஆசிரியரானார். 1942ஆம் ஆண்டு யாழ் நூலின் ஆராய்ச்சிக்காக திரும்பவும் பிரபுத்த பாரத ஆசிரியர் பதவியினைத் துறந்து வெளியேறிய அடிகளாரை 1943ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேராசிரியராக ஏற்றுக் கொண்டது.

அடிகளார் பத்தாண்டுகளாக ஆராய்ந்து கண்டுணர்ந்த இசை நூலான யாழ் நூலினைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்து ஆதரவிலே திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் 1947ஆம் ஆண்டு ஆனி மாதம் 20, 21ஆம் தேதிகளில் அரங்கேற்றினார். அரங்கேற்று விழாவிலே அடிகளார் கண்டுணர்ந்த யாழ்க் கருவிகள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டன. விழாவிலே சங்கீதபூசணம் க. பொ. சிவானந்தம் பிள்ளை அவர்கள் யாழ்களை மீட்டி இன்னிசை வழங்கினார்.

யாழ்நூல் அரங்கேற்று விழாவிலே கலந்து கொள்ள அடிகளார் புறப்படும் முன்னரே அவரது உடல் நோயுற்றிருந்தது. அதனைப் பொருட்படுத்தாது பயணம் செய்து மீண்டதனால் அடிகளாரை நோய் நன்றாகவே பற்றிக் கொண்டது. ஆகவே கொழும்பு மருத்துவமனை யொன்றிலே சிகிச்சை பெறலானார்.

அடிகளாரைப் பரிசோதித்த மருத்துவர் முழு ஓய்வும் அமைதியான சூழ்நிலையும் வேண்டுமெனக் கூறினார். வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடாலயத்தார் மருத்துவர் கூறிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தும் பயன்தராமையினால் **1947ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 19ஆம் நாள் இரவு அடிகளார் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.** தமிழ் அன்னை கண்ணீர் வடித்தாள். தமிழ் கூறும் நல்லுலகம் ஒப்பற்ற முத்தமிழ் வித்தகரை இழந்தது.

அடிகளாரின் ஊன் உடம்பு, அடிகளார் பிறந்த பொன்னுடான மட்டக்களப்பினுக்குக் கொண்டு வரப்பட்டது. அடிகளார் நிறுவி தனது குழந்தைபோல் பேணிக்காத்த சிவாநந்தா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கல்லறையினுள் சமாதி வைக்கப்பட்டது.

கல்லறையின் மேலே அழகிய நினைவு சின்னம் எழுந்துள்ளது. அந்த நினைவு சின்னத்தின் மேடையிலே அடிகளார் இயற்றிய

வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது.

என்ற கவிதை பொறிக்கப்பட்டுள்ளது.

உத்தமனாகிய இறைவன் உள்ளக்கமலத்தைத் தான் விரும்புகிறாரென்று பாடிய அடிகளார், தமது உள்ளக் கமலத்தை தமிழ்கூறும் நல்லுலகினுக்கு ஈந்து அமரராகி விட்டார்.

இளங்கோ அடிகள் அமரராகிவிட்டார். சிலப்பதிகாரத்தைத் தந்து அழியாப் புகழ்பெற்றார். அதே வண்ணம் விபுலாநந்த அடிகளும் யாழ்நூலைத்தந்து அமரராகி அழியாப் புகழ்பெற்றார்.

இளங்கோ அடிகளின் மறு பிறவி போன்ற விபுலாநந்த அடிகளார், இளங்கோ அடிகளாரையும் மிஞ்சிவிட்டாரென்றே சொல்ல வேண்டும். இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்தைப் படித்துத்தான் அடிகளார் பழந்தமிழர்களின் யாழ்களைத் தேடலானார் தேடினார். தேடினார். பத்தாண்டுகளாகத் தேடி பழமை மிக்க யாழ்நூலைத் தந்தார். யாழ்நூல் அடிகளாருக்கு இறவாத பெருமையைக் கொடுத்தாலும், அவர் எழுதிய கட்டுரைக் கருவூலங்களும், பாடிய கவிதைகளும் தமிழ் அன்னைக்கு என்றென்றும் மணம் கமழ்ந்து கொண்டிருக்கும் மணி ஆரங்களாகின.

அடிகளாரின் நிறைவேருத ஆசைகளும் சிலவுண்டு. அந்த ஆசைகளை அடிகளார் நிறைவேற்றும் முன்னர் காலன் கரங்களை நீட்டிவிட்டான்.

அடிகளார், யாழ்நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல், மகாபாரத ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி, மேற்றிசைச் செல்வ ஆராய்ச்சி, விஞ்ஞான தீப ஆராய்ச்சி என்பவைகளைச் செய்யவேண்டுமென்று ஆராய்ந்தார். ஆராய்ந்தவைகளை வெளியிட்டார். ஆனால் ஆராய்வினை முற்றுவிக்க முன்னர் காலன் கரத்தில் பட்டுவிட்டார்.

அடிகளார் விட்டுச் சென்ற இந்த ஆராய்ச்சியினை இன்னொருவரால் ஒரு பொழுதும் தொடர்ந்து செய்ய முடியாது. ஏனென்னில் அடிகளார் தமது ஆராய்ச்சியினை எவ்வாறு செய்வாரென்று யாராலுமே வரையறுக்க முடியாது. தொடர்ந்து செய்வதற்கான குறிப்புகளையும் அடிகளார் விட்டுச் செல்லவில்லை.

அடிகளார் காலத்துக்குக்காலம் எழுதிய கட்டுரைகள் கவிதைகள் என்பன,

விபுலாநந்த அமுதம்

விபுலாநந்தத் தேன்

விபுலாநந்தக் கவிதைகள்

விபுலாநந்த வெள்ளம்

விபுலாநந்தச் செல்வம்

விபுலாநந்த ஆராய்வு

விபுலாநந்தக் கவிமலர்

விபுலாநந்தச் சொல்வளம்

என்னும் நூல்களாகத் தமிழ் கூறும் நல்லுலகினுக்குக் கிடைத்தமை ஓர் பெரும்பேருகும், இந்நூல்களை நாம் தொகுத்து வெளியிட எடுத்துக் கொண்ட சிரமங்கள் எண்ணிலடங்காதன.

அடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகள்தான் இனித் தொகுக்கப்பட வேண்டியவைகளாகும். அவைகளும் தனியோர் நூலாக வெளிவருமென எதிர்பார்ப்போமாக.

அடிகளார் பிறந்தவுடன் சாதகம் கணிக்கப்பெற்றது. கணிக்கப்பெற்ற சாதகப் பலன்படியே அனைத்தும் நடைபெற்றுள்ளன. அற்ப ஆயுள் எனக்கூறியமைக்கிணங்க அடிகளார் நீண்டகாலம் வாழக் கொடுத்துவைக்காமல் மறைந்து விட்டார்.

அடிகளாரின் சாதகப்பலனை கூறியநான் திருமணத்தைப் பற்றிச் சொல்லவில்லையே என்று பலர் கருதக்கூடும் ஆகவே திருமணம் பற்றி ஓர்சில வார்த்தைகள்.

அடிகளாருக்குச் சாதகப்பலன்படி திருமணப்பலன் உண்டு. திருமணம் செய்தால் மனையாளுடன் சேர்ந்து வாழாமல் பிரிந்திருக்கவே வேண்டும். பிரிந்திருந்து வாழ்வதென்ருல் திருமணமே வேண்டியிருக்காதே. ஆதலினுற்ருன் அடிகளார் இல்வாழ்வைத் துறந்து துறவியாக வாழ்ந்தார்.

அடிகளார் இல்வாழ்வில் ஈடுபட்டிருப்பாரெனில் தமிழ்த்தாய் யாழ் நூலினைப் பெற்றிருக்காது. இளங்கோஅடிகள் சிலப்பதிகாரத்தைத் தரத்தான் பிறந்தார் என்பதுபோல், விபுலாநந்த அடிகளாரும் யாழ்நூலைத் தரத்தான் பிறந்து நம்மிடம் வாழ்ந்து அமரரானுர்.

இளங்கோ அடிகளின் மறு பிறவி போல் அடிகளார் தோன்றினுர். வாழ்நாள் முழுதும் தமிழினுக்காக உழைத்தார். தமிழை ஆங்கிலத்தில் அழகாக எடுத்துக் காட்டினுர். தமிழின் சிறப்பை ஆங்கிலம் பேசுபவர்கள் அறியச் செய்ததுபோல், ஆங்கில இலக்கியங்களையும் தமிழர்கள் அறியச் செய்தார்.

இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற வித்தகர் மறைந்து விட்டார். அடிகளார் மறைந்தாலும் அடிகளாரின் அமைதி தவழும் கண்களும், உரங்கொண்ட நெஞ்சு வன்மையும், சரள

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஈரத்தின் சுவடு

திரு இரா. குழந்தைவேலு, எம். ஏ.,

காட்சி : 5

களம் : கழார் என்னும் ஊரின் காவிரித்துறை,

காலம் : காலை

கூற்று : கரிகாற்பெருவளத்தான், அமைச்சர், ஆட்டனத்தி, ஆதிமந்தி, மருதி, வெள்ளிவீதி, மக்கள்.

கரிகாற்பெருவளத்தான்: அமைச்சரே! நாளும் என் மகள் ஆதிமந்தி யாழை எடுத்து மீட்டும் இன்னிசையின்பத்தால் உயிர்வாழ்கிறேன்,

அமைச்சர் : வேந்தே! தங்கள் செல்வி இசைக்கேற்ப ஆடவல்ல ஆட்டனத்தியாரும் காவிரி நீரில் பலவகையாக ஆடுதலைக் காண்மின்!

க. பெ. வளத்தான் கண்டேன்; களிகூர்ந்தேன். என்மகள் யாழெடுத்து இன்பஞ்சேர்க்கும் இசைகூட்டவே ஆடல் வாழும்; வளரும் ஐயமில்லை.

அமைச்சர் : ஆட்டனத்தியார் தம் காலில் வீரக் கழல் அழகாகப் புரள, பாண்டில் மணிகள் ஒலியைத் தர ஆடும் அழகே அழகு! நீந்தும் வகையெலாம் அறிந்த அவர்தம் வல்லமையே வல்லமை!

க. பெ. வளத்தான்: ஆ! இவற்றையெல்லாம் கண்டு மகிழ் சிறந்து வாழத் தக்க பேறு பெற்றதே பெரும்பேறு!

மருதி : ஆ! ஆ! ஐயகோ! அவரை...அவரை...

மக்கள் : ஆ! கொடுமை! கொடுமை!

க. பெ. வளத்தான் : என்ன? என்ன? அமைச்சரே!

121-ஆம் பக்கத் தொடர்ச்சி

மாகப் பேசும் நாவன்மையும், தூய காவி ஆடையும் நம் கண் முன்னே தோன்றவே செய்கின்றன.

காவி ஆடை பூண்டு தமிழை வளர்த்த பேரறிஞர் நம்மிடமிருந்து சென்று 22 ஆண்டுகள் அகன்றுவிட்டன. 22 ஆண்டுகள் என்பதை நினைத்துப் பார்க்கும்பொழுது நேற்றுத்தான் நடந்தது போலிருக்கிறது. அத்தனை தூரம் பசுமையாக அடிகளாரின் நினைவு நம்மிடம் இருந்துகொண்டேயிருக்கிறது. அவ்வாறு நம்மிடம் உறைந்து தமிழுடன் இரண்டறக் கலந்துவிட்ட அடிகளாரை, அன்னாரது நினைவுநாளிலே நினைவுகூர்வோமாக. விபுலாநந்த அடிகளார் மறைந்துவிட்டார். ஆனால் விபுலாநந்த இலக்கியம் நம்மிடம் வாழ்ந்துகொண்டே இருக்கிறது.

பெண்ணொருத்தி அரற்றி அவலக் குரல் கொடுத்தாளே! அடுத்து மக்களும் காவிரியைச் சூழ்ந்து நின்று...

அமைச்சர்: (மன்னர் பேச்சை முடித்ததற்கு முன்னர்) மன்னவ! மன்னவ! ஆட்டனத்தியார் கட்டுக் கடங்காத நீர்ச்சுழலில் சிக்கித் தவிக்கிறார்!

ஆதிமந்தி: ஆ! என் காதல!

வெள்ளிவீதி: ஆ! ஆதிமந்தி மயக்கத்தால் மண்ணில் சாய்ந்தாளே! (நீரில் 'திடும்' என்னும் ஓசை எழவே நோக்கி) மருதி! மருதி! நீயும் வெள்ளத்தில் பாய்ந்தாயா? (தன் முழங்காலில் ஆதிமந்தியை அணைத்தவாறு அருகிலுள்ளவரை நோக்கி) ஐயா! சிறிது தண்ணீர் தந்தருளுக.

க. பெ. வளத்தான்: அமைச்சரே! நம் அரண்மனையின் முழுவலி ஆடவர் வெள்ளப்பெருக்கில் பாய்ந்தனர். ஆட்டனத்தியைக் கரையேற்றுதல் ஒருதலை! (திரும்பவே) இஃது என்ன? இறைவா! என் குலக்கொழுந்து வாடிவிழுந்தாளே! என்செய்வேன்?

வெள்ளிவீதி: வேந்தே! கவலை வேண்டா. ஆடையில் தோய்த்து வந்த தண்ணீரைப் பிழிந்து முகத்தில் தெளித்தேன். சிறிது தெளிவு பிறந்திருக்கிறது. ஆறுதலைத் தந்தது.

க. பெ. வளத்தான்: (கண்ணிதழ்களில் நீர்த்துளிகள் சேர) என் கண்மணியே!

ஆதிமந்தி: தந்தையே! என்... என் தெய்வத்தை அருகில் காண்கிலேனே!

வெள்ளிவீதி: அஞ்சலை! நின் அச்சமும் கவலையும் தெறித்தோட அவர் கரை எய்துவர். என் தோழி மருதி நீரில் பாய்ந்துவிட்டாள். வெள்ளப்பெருக்கிற்குச் சிறிதும் அஞ்சாது அவரைக் கொண்டுவந்து சேர்ப்பாள். என் நம்பிக்கை ஈது.

ஆதிமந்தி: நீ வழங்கிய இன்சொல்லுக்கு நன்றி!

அமைச்சர்: (சூழ்ந்து நின்ற மக்களை நோக்கி) அகலுவீர்! அகலுவீர்! (மன்னரை நோக்கி) மன்னவ! அரண்மனை வீரர்கள் பலரும் வெள்ளத்திற்கு அஞ்சி எதிர்த்து நீந்த வியலாது கரையேறலாயினர்.

க. பெ. வளத்தான் : ஏன் ? ஏன் ? முன்னர் இளமகள் ஒருத்தி பாய்ந்தனளே ! அவளைத் தடுத்திருத்தல் தக்கது!

ஆதிமந்தி : தந்தையே! யானே நீரில் பாய்கிறேன்.

க. பெ. வளத்தான் : மகளே! வேண்டா; வேண்டா.

அமைச்சர் : தடுத்து நிறுத்துக.

மக்கள் சிலர் : இழுத்துத் தடுக்க.

ஆதிமந்தி : என்னை விலக்கலீர் !

க. பெ. வளத்தான்: என் கண்மணியே! வேண்டா,

அமைச்சர் : அமைதி ! அமைதி ! அதோ நீரில் தலைகள் எழுகின்றன.

வெள்ளிவீதி : ஆ! ஆ! நெடுங்கூந்தல் வெளிப்படலைக் காண்மின்! என் தோழியே அவள் ! அவள் ஆடை நிறம் தோன்றுகிறது ! எளிதில் இருவரும் கரையை அணுகுவர்.

ஆதிமந்தி : அவர் என் கணவரே !

க. பெ. வளத்தான் : அரும்படர் தீர்ந்தது ! அமைதி ! அமைதி ! இருவரும் கரையை நெருங்கினர்.

(வெள்ளிவீதியை நோக்கி) மகளே நின்பெயர் என்னை ?

வெள்ளிவீதி: வேந்தே ! வெள்ளிவீதி.

க. பெ. வளத்தான் : வாழ்க, மகளே ! வாழ்க !

(துடித்து வீரர்களை நோக்கி) ஏன் இங்குளீர்? இருவரையும் கரையில் சேர்க்க. (மக்களைக் கனிவொடு வேண்டி) விலகுவீர்.

ஆதிமந்தி : (கரை சேர்ந்த ஆட்டனத்தியை நோக்கி) என் அன்பரே விழியுங்கள்.

ஆட்டனத்தி : ஆதிமந்தி ! என்...என் கண்ணே!

வெள்ளிவீதி : (அவ்வேளையில்) மருதி ! என் நெஞ்சில் தேன் பாய்ச்சினாய் !

க. பெ. வளத்தான் : மகளே, மருதி ! தக்க வேளையில் ஆண்களின் ஆற்றலுக்கும் விஞ்சிய செயல் செய்தாய் நின் செயலை எவ்வாறு புகழ்வேன்? என் மகளுக்கு வாழ்வளித்தாய். நீ கோயில் கொளத்தக்க பெருமகள் ! நெடிது வாழ்க! உனக்கு என்ன கைம்மாறு செய்யவல்லேன்?

மருதி : (நெட்டுயிர்ப்புத் தோன்றவே) மன்னவ ; என்னால் ஒன்றும் கூறவியலவில்லையே !

ஆதிமந்தி : மருதி! உன்னை ஒரு வயிற்றுப் பிறப்பாய் ஏற்கிறேன். என் காதலரை உயிரோடு காட்டிய உன்னை வாழ்நாளெலாம் மறவேன்

க. பெ. வளத்தான்: மகளே! நின் கணவரொடு அரண்மனைக் குப் புறப்படு. யானும் பின் தொடர்வேன். (அமைச்சரை நோக்கி) அமைச்சரே ! மருதியையும் வெள்ளிவீதியையும் தேரிலேற்றி அவர்தம் மனையில் சேர்த்தல் தகும்.

அமைச்சர் : மன்னவ! அனைத்தும் செய்வல்யானே.

காட்சி : 6.

களம் : நன்னன் இல்லத்தின் தலைவாயில்

காலம் : மாலை

கூற்று : நன்னன், காமக்கண்ணன்

நன்னன் : காமக்கண்ணன்! இந்நாளில் உன்னைக்காண்பது அத்தி பூத்ததுபோலாயிற்றே!

காமக்கண்ணன் : நன்னன்! நாளும் இடையறு உழைப்பு. முயற்சி முதிர முதிர ஓய்வு ஏது ?

நன்னன் : (பாராட்டல்போல் பழித்து) நன்று கூறினாய், நண்ப! நின் விடாப்பிடி உழைப்பை ஊர் அறியுமே.! நின் முயற்சி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்கிறது போலும் !

காமக்கண்ணன் : ஆம். ஐயமென்னை ?

நன்னன் : ஓ! நின் நாட்டம் நாளும் ஒவ்வொரு மேனியழகினைத் தாவுகின்றது போலும் ?

காமக்கண்ணன் : நண்ப, எங்கெங்கோ என்னைத் தள்ளிக் குறைத்து மதித்தாயே !

நன்னன் : ஓ ! எண்ணிக்கையைக் குறைத்துக் கூறியமைக்கு நெஞ்சம் நொந்தனையோ ! வருந்த வேண்டா. (கனிவு தோன்ற) ஒன்று வேண்டுவன். என் குறிக்கோள் நல் வழிப்படுதற்கு நின் உதவி வேண்டும்.

காமக்கண்ணன் : (மிக நகைத்து) அந்தோ கொடுமை! நின் எண்ணத்திற்கெல்லாம் குறிக்கோள் என்னும் பெரும்

பெயர் கூறத் தகுவதா ? கூறு. அது நகைக்கத் தக்கதே ! நின் மனத்தில் எழுந்த குறிப்பைக் குறிக்கோள் எனக் கூறின், உலகில் மழை பொழியுமா ? ஆ ! கெட்டேன் ! நம்மை மறந்தேன் ! நம் இருவர்க்குரிய தனித்த பண்பாட்டுலகின் எல்லையில் நின் எண்ணமும் குறிக்கோள் எனப் பெயர்கொளத் தக்கதே. வெல்க நின் நம்பிக்கை. சரி. நண்ப, நின் கள்ளமில் மனக்குறிப்பை வெளியிட்டிலையே !

நன்னன் : இரவு தொடங்குகிறது. வெள்ளி வீதி நாளும் இவ்வேளையில் தன் தோழி மருதி வீட்டிற்கு இந்நெடுந் தெரு வழியே வருதல் வழக்கம். வருங்கால் அவள் செவியுணர ஒரு பொய்யினை உரத்துக் கூறி வெளியிடல் வேண்டும். (குழைந்து) நண்ப, இப்போது நின் துணையின்றி என் குறிக்கோள் வாழாது.

காமக்கண்ணன் : அச்செய்தி யாது ?

நன்னன் : (சினம் பொங்க) நேற்று அக்கூத்தாடி ஆட்டனத்தியைக் கரை சேர்த்தாளே மருதி! அச்செயல் நின் நினைவினின்று அகன்றிருக்க வழியில்லை. மருதி தன் உயிராய் அவனை மதித்த கொடுமை வெளிப்பட்டதே ! (சுற்றும் பார்த்துக் குரலைத் தளர்த்தி) அவள் கொண்ட எண்ணத்தைத் திரித்துத் தொலைத்தால், மருதி என்னை மணக்க முந்துவாள் என்பது என் நம்பிக்கை.

காமக் கண்ணன் : நீ மருதியை மணக்கப் படும்பாடு பெரிது. (குறும்பாக விழியை உயர்த்தி) காதல் கடந்த நின் மயக்கமும் பெரிது ; பெரிது. சரி ; அவள் எண்ணத்தை மாற்றுதல் எளிதோ ?

நன்னன் : எளிது ; எளிது. சற்று முன்னர் ஆட்டனத்தி மாய்ந்தான் என்னும் ஒரு பொய்யினை, மெய்யென்று வெள்ளி வீதி வாயிலாக மருதி அறிந்தால், அவள் மனம் மாற்றம் பெறுதல் உறுதி !

காமக்கண்ணன் : (சிரித்து) நண்ப, நின் அறிவின் நுட்பம் பொல்லாதது ! எண்ணிப் பாராட்டற்கரியது ! நின் முடிவு இனியது ! கொக்குத் தலையில் வெண்ணெய்யைப் பூசுக ! நீ தானைத் தலைவர் மகன்! நின் சொல் ஊருக்கு உண்மையாய்ப்படும்! நின் சிந்தனை தனித்த வழியில் படரும் செம்மையே செம்மை! வாழ்க. நின் எண்ணம் இன்னே முடிக.

நன்னன் : (குரலைத் தாழ்த்தி) ஆ! கடவுளேயே கண்டாங்கு வெள்ளி வீதியைக் காண நேர்ந்தது. இது தக்க வேளை. (வெள்ளி வீதி வருதலைக் கண் சாய்த்துக்காட்டிப் பேச்சைத் தொடங்குதல்) அக்கொடுமையை என் வாயால் எவ் வண்ணம் எடுத்துரைப்பேன்? நேற்று நம் அரண் மனையில் ...

காமக்கண்ணன் : சொல்லு, நம் அரண்மனையில்...

நன்னன் : சற்றுமுன்னர், ஆட்டனத்தி இறந்த அவலக் கவலையை அறியாயோ ?

காமக்கண்ணன் : ஐயகோ! கொடுமை! இயற்கைக்கு இரக்கமில்லை!

நன்னன் : நண்ப, மிக்க நன்றி. நல்ல நடிப்பு என் எண்ணம் வெற்றி தரும்! வெள்ளிவீதி குறுக நடையிட்டு நம் சொற்களைச் செவிமடுத்துச் செல்வதைக் கண்டனையா? இறைவா! இப்போது என் மனங்குளிர்ந்தது.

காமக்கண்ணன் : நின் வழியில் தென்றல் வீசுகிறது. சரி நாளை வருவேன்.

நன்னன் : சிறக்க.

காட்சி : 7

களம் : மருதியின் மனை

காலம் : இரவு

கூற்று : மருதி, வெள்ளிவீதி.

மருதி : வெள்ளிவீதி! வருக. (வெள்ளிவீதி ஒன்றுஞ் சொல்லாதிருக்கவே) நின் துயருண்ட முகம் எனக்குத் துன்பந் தருகிறது இன்று நீ ஏதோ கவலையில் ஆழ்ந் திருக்கிறாய்! வாய்திறந்து ஒரு சொல்லும் உரைக்க லாகாதா? ஏதோ குடிமுழுகினாற்போல இருக்கிறாயே! நின் வாட்டம் மனதில் பதிந்திருக்கும் கவலையை உணர்த்து கிறது. நீ கவலையுற்றது ஏன் ?

வெள்ளிவீதி : எப்படிச் சொல்வேன் ?

மருதி : கலக்கம் வேண்டா. நிகழ்ந்தது யாது ?

வெள்ளிவீதி : (கண்ணிதழ்கள் நனைய) சற்று முன்னர் ஆட்டனத்தி இறந்தாராம் !

மருதி : (நடுங்கி) என்ன? உண்மையா? இராது! இராது!

வெள்ளிவீதி : (கண்ணீரைத் துடைத்தெறிந்து) அரண் மனைக் கூட்டத்தார் கூறக்கேட்டேன்.

மருதி : (அழுது) அந்தோ ! கொடுமை ! அவரை நினைந்தே உயிர்வாழ்கிறேன் ! இப்போது அவர் உயிர்ப்பும் அடங் கிற்றே !

வெள்ளிவீதி : நம் உணர்ச்சியை இயற்கை விளங்கிக் கொள்ளவில்லையே !

மருதி : (தெளிந்த மனநிலையில் கண்ணீரை விரலால் தெறித்து) ஈரமில்லா இயற்கை என் கண்ணில் ஈரம் காட்டி யது. இயற்கை வாழ்ந்துபோகட்டும் ! என் வழிபாட்டின் ஒளி மறைந்தது. ஆம் அவர் உயிரோடு இல்லாதபோது, யான் உயிர் வாழ்வது வீண்மை !

வெள்ளிவீதி : சாவு என்பது உலகைச் சுற்றி வளையச் சூழ்ந்து திரியும் அழியா வட்டக்கோடு. அவ்வட்டத்தைத் தாண்டியவர் எவர் ? (பழித்து) பொதுநோக்குடைய சாவு உலகில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று எந்நாளும் வேற்றுமை பாராட்டியதில்லையே! இப்படி மறைந்த உயிருக் காகத் தவித்து நிற்பது, சாவின் திருவிளையாடலுக்குப் பெருமை சேர்ப்பதாகும். உனக்குத் தேறுதல் காட்டும் ஆற்றலை யான் பெறவில்லையே! (இருவரும் துன்பப் பெருக் கத்தால் அமைதியாக எழுந்து பிரிந்தனர்).

[தொடரும்]